பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 29 செவ்வாய்க்கிழமை (13-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 178

# உணவு லொறிகள் நேற்று வன்னி நோக்கிப் புறப்பாடு

## ஆரம்பத்துக்கு பத்து வாகனங்களே

வவுனியா, ஓகஸ்ட் 13

**இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேச மக்களுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு பத்து லொறிகள் நேற்று வவுனியாவிலிருந்து புறப்பட்டன.**

கடந்த 25 நாள்களின் பின்னர், நேற்றே முதன்முறையாக 'கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கும் வவுனியா வடக்குப் பிரதேசத்துக்கும் உணவு லொறிகள் சென்றன.

நேற்று நாற்பது லொறிகளில் உணவுப் பொருள்கள் இங்கிருந்து அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் பத்து லொறிகள் மட்டுமே சென்றன.

கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி பகுதிக்கு உணவுப் பொருள் ஏற்றிய வாகன அணி செல்வது இதுவே முதற் தடவையாகும்.

நேற்று 40 லொறிகளில் உணவுப்பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் எனச் செய்திகள் வெளியான போதிலும் பத்து லொறிகளே இங்கிருந்து சென்றன.

இந்த விடயம் குறித்து வவுனியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்ததாவது:—

வவுனியா நகரிலிருந்து பொருள்களை ஏற்றிச் சென்ற லொறிகள் சாந்தசோலையில் பொருள்களை இறக்கி சோதனையிட்டு வேறு லொறிகளில் மாற்றி ஏற்றிய அந்த நடைமுறைகளை அரசாங்க அதிபர், வவுனியா செஞ்சிலுவைக் கிளைத்தலைவர் மற்றும் செயலாளர், செயலக அதிகாரிகள் கொட்டும் மழையிலும் நேற்று நேரடியாக நின்று பார்வையிட்டார்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியான — போர் முனைப் பிரதேசத்துக்கு — 1990 களில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் வழித்துணையோடு வண்டித் தொடரில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 5 நாள்களில் 175 அகதிகள் தமிழ்நாடு சென்றனர்

சென்னை, ஓக. 13

கடந்த 7 ஆம் திகதியிலிருந்து 11 ஆம் திகதி வரையான ஐந்து நாட்களில் 175 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்துள்ளனர்.

சென்னையில் உள்ள ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் பேச்சாளர் சுந்தரபாண்டியன் பி.பி.வி. சிங்களச் சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

அவர் வெளியிட்ட தகவல் வருமாறு!-

★ 7 ஆம் திகதி 12 பேரும் 8 ஆம் திகதி 21 பேரும் 9 ஆம் திகதி 30 பேரும் 10 ஆம் திகதி 50 பேரும் 11 ஆம் திகதி 62 பேரும் தமிழகம் வந்துள்ளனர். இவ்வாறு அகதிகள் வருகை தொடர ஆரம்பித்துள்ளது

★ கிளிநொச்சியில் உள்ள அகதிகள் வவுனியாவுக்கோ, முல்லைத்தீவுக்கோ, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவுக்கு எதிராக தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## மதுரையில் படம் தீவைப்பு

சென்னை, ஓக. 13

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராகத் தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் உள்ள ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் பேச்சாளர் சுந்தரபாண்டியன் இத் தகவலை வெளியிட்டார்.

"இலங்கை அகதிகள் தற்போது இந்தியா வருவது தொடர்பாக இந்திய ஆட்சியாளர்கள் குறிப்பிடும்படியான கருத்து எதனையும் வெளியிடவில்லை. ஆனால் இங்கு வெளியாகும் பத்திரிகைச் செய்திகளின்படி 1983 இல் அப்போதைய ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எதிராக எழுப்பப்பட்ட ஆர்ப்பாட்டங்களை போல் தற்போது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் எதிராக மேற் கொள்ளப்படுகின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியத் தலையீட்டை வற்புறுத்தி சாகும் வரை உண்ணாவிரதம்!

## பாட்டாளி கட்சியின் பெண்கள் அணி ஆரம்பித்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் ஈழத் தமிழர் அல்லற்படுவதைத் தடுக்கவும் —

அவர்களுக்கான உணவு, மருந்துப் பொருள் விநியோகம் மறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவும் —

இந்த விடயங்களில் இந்திய, தமிழக அரசுகள் தலையிடவேண்டும் என்று கோரி பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணியினர் தமிழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்தனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் கீரன் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரனேட் வீச்சில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாண நகரில் நேற்று முன்தினம் படையினர் பாதுகாப்பு அரண் ஒன்றின் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதாகவும் அதில் ஒரு படையினர் கொல்லப் பட்டதாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

(இ-3)

### அகதிகள் தமிழகம் செல்லும் நிலை

## மன்னார் பிரிகேடியருடன் அகதிகள் தூதரகம் பேச்சு

மன்னார் பேசாலையில் இருந்து இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாகச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை அடுத்து, அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் மன்னாரில் இராணுவ பிரிகேடியரைச் சந்தித்து கள நிலைமைகள் குறித்துக்கேட்டறிந்தனர்.

இவ்வாறு கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது

மேலும் அகதிகள் தமிழகம் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது என்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டது.

(உ-3)

## திருமலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள்

### சிப்பாய் பலி! ஐவர் காயம்

திருகோணமலையில் இடம்பெற்ற இருவெவ்வேறு சம்பவங்களில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். ஐந்து சிப்பாய்கள் காயமடைந்தனர்.

ஒரு சம்பவத்தில், ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நொட்டயாவுக்கும் மீகஸ்வேவவுக்கும் இடையில் இடம்பெற்றது. காயமடைந்தவர் ஹொரவப்பொத்தானை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்

மற்றொரு சம்பவத்தில் கல்லாற்றுக்கும் புத்தூருக்கும் இடையில் படையினரின் வாகனம் ஒன்று புலிகளின் அமுக்க வெடியில் சிக்கியது.

இந்தச் சம்பவத்தில் நான்கு படையினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## மாமாங்கம் கோயிலில் கண்ணிவெடிச் சம்பவம்

### 33 பக்தர்கள், 4 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவ வேளையில் — நேற்று முன்தினம் இரவு — கோவில் வளாகப் பகுதியில் வெடித்த கிளைமோர் கண்ணிவெடியில் நான்கு பொலீஸாரும் 33 பக்தர்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

பொதுமக்கள் வழிபாடு செய்துகொண்டிருந்த போது இடம்பெற்ற இத் தாக்குதலைப் புலிகளே நடத்தியிருப்பதாக ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகள் குற்றம் சாட்டின.

ஒரு கடையின் கூரையைப் பிய்த்துக்கொண்டு வெடித்த இந்தக் கண்ணிவெடி பக்தர்கள் மத்தியில் சிதறியது.

சம்பவத்தில் காயமுற்றோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

(உ-3)

### ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை

## விடைத்தாள்களைத் திருத்த ஆசிரியர்கள் நிபந்தனை

கொழும்பு, ஓக. 13

புதிய ஆசிரிய சேவைத் திட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டதால் எழுந்துள்ள சம்பள முரண்பாடுகள் உட்பட ஆசிரியர் சம்பளம் தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அரசுக்கு ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் காலக்கெடு விதித்திருக்கின்றது.

இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய திருத்தங்கள் இத்திகதிக்கு முன் கொண்டு வரப் படாவிட்டால் விரைவில் நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த மாட்டோம் என்றும் சம்மேளனம் எச்சரித்திருக்கின்றது.

நேற்றுச் சம்மேளனம் நடத்திய செய்தியாளர் மாநாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளிலிருந்து வீழ்ந்து மரணம்

சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்தவர் மரணமான சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வரணியில் இடம்பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த சின்னக்குட்டி இராசா (வயது 60) எனப்படும் இளைப்பாறிய பஸ் நடத்துனரே மரணமானவராவார்.

கரவெட்டியிலுள்ள மகளின் வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பி வரும்போது சைக்கி...லிருந்து இவர் தவறி வீழ்ந்து மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# வடக்கில் ஓர் அங்குலத்தைக்கூட ஐ. தே. கவினால் மீட்க முடியவில்லை

## அனுருத்த சொல்கிறார்

கொழும்பு, ஓக. 13

வடக்கில் ஓர் அங்குலத்தைக் கூட ஐ. தே. கவினால் மீட்க முடியாத நிலையில், யாழ். குடாநாட்டை நாம் கட்டுப்படுத்தவில்லையா?

இப்படி பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இரத்தினபுரியில் நடந்த ஒரு கூட்டத்தில் கேட்டார்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஒரு பின்னடைவு [illegible] தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் யுத்தத்தில் தோற்பதும் வெல்வதும் சகஜமே.

ஐ தே. க. காலத்தில் யாழ் கோட்டை, மாங்குளம், நாகதேவன்துறை முகாம்கள் மீதான புலிளிகன் தாக்குதலினால் நாம் பின்னடைவுகளைக் காணவில்லையா?

முல்லைத்தீவுத் தாக்குதலின்போது எமது வீரர்கள் போரில் மடிந்தனர்.

ஆனால் 1990 இல் கிழக்கு மாகாணத்தில் எமது பாதுகாப்புப் படையினரில் 250 பேரைப் புலிகளிடம் சரணடைய வைத்தது யார்? இதே ஐ தே. க. தானே.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# நாடாளுமன்றிலுள்ள தமிழ் கட்சிகள் அரசுக்குகாலக்கெடுவிதிக்கவேண்டும்

## புத்தி ஜீவிகள் கூட்டத்தில் யோசனை

கொழும்பு, ஓக 13

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் அரசுக்குக் காலக்கெடு விதிக்க வேண்டும்.

மருதானையில் நடைபெற்ற புத்தி ஜீவிகள் இடதுசாரிப் பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்கண்டவாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

இன்றைய நெருக்கடிக்குப் பரிகாரம் காணுவது எப்படி? என்பதை ஆராய இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது

இப்பிரச்சினைக்காகன அரசியல் தீர்வு முயற்சி இழுத்தடிக்கப்படுகின்ற போக்கைத் பார்த்தால்இந்த ஆட்சிக்காலத்தில் எதுவும் நடக்கும் என்று சொல்வதற்கு இல்லை. எனவே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு அரசுக்கு ஒரு காலக்கெடுவை வீதிக்க வேண்டும்.

அக்குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அரசு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

தவறினால் தமிழ்க்கட்சிகள் அரசுக்குக் கொடுக்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று இக் கூட்டத்தில் சிலர் ஆலோசனை தெரிவித்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(இ-3)

# நரசிம்மராவ் மீதான நடவடிக்கையை நிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஓக. 13

லகுபாய் பட்டேல் மோசடி செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மீது டில்லி தலைமைப் பெருநகர் மாஜிஸ்திரேட் எடுத்துள்ள குற்ற வழக்கு நடவடிக்கையை நிறுத்திவைக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நீதிபதி எஸ்.வி. அகர்வால், நீதிபதி ஜி. வி. நானாவதி ஆகியோரைக் கொண்ட டிவிசன் பென்ஸ் இந்த உத்தரவை வழங்கியது.

இந்த வழக்கில் தம்மையும் குற்றம்சாட்டப்பட்டவராக இணைந்து மாஜிஸ்திரேட் சமன்ஸ் அனுப்பியதை எதிர்த்து திரு. நரசிம்மராவ் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

குற்றவழக்கு விசாரணையில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு வரும் போது மற்றொருவரை குற்றம் சாட்டப்பட்டவராக இணைப்பதற்கு மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரம் உள்ளதா என்ற சட்டப் பிரச்சினையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கும் வரை இந்த உத்தரவு அமுலில் இருக்கும் என்று நீதிபதிகள் கூறினார்கள். (இ-3)

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரி நோயாளர் அதிகரிப்பு

நவாலி, ஓ க. 13

மானிப்பாயில் உள்ள தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை கடந்த சில நாள்களாக நோயாளர்களினால் நிரம்பி வழிகிறது

வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளிலிருந்து யாழ் பெரியாஸ்பத்திரிக்குச் செல்வதில் உள்ள கஷ்டங்களைக் கருதியே தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அதிகரிக்கக் காரணம் ஆகும்.

அந்தப் பகுதி நோயாளர்கள், யாழ். பெரியாஸ்பத்திரிக்கு வருவதைத் தவிர்த்து, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்.

இதனால் தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் தற்போது தினமும் 200க்கும் மேற்பட்ட நோயாளிகளும், கிளினிக் சிகிச்சைப் பிரிவில் 150க்கும் மேற்பட்டவர்களும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

இங்கு பணியாற்றும் 3 வைத்தியர்கள் இவர்களுக்குச் சிறந்த முறையில் சேவையாற்றி வருவதை அவதானிக்க முடிகிறது.

(இ-100)

## ப. நோ. கூ. ச. கிளைகளில் சீனி இல்லை

யாழ்ப்பாணம், ஓக 13

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்துக்கும், 'உ' அட்டை வைத்திருப்போருக்கும் செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு ஒதுக்கீடு செய்த சீனியை வழங்கப் ப. நோ. கூ. சங்கக் கிளையினர் மறுப்பதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

சீனிக்குப் பதிலாக அரிசியைப் பெறுமாறு யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளர்கள் தெரிவிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

செயலகம் போதியளவு சீனியை வழங்கவில்லை என்றும் —

வழங்கப்பட்ட சீனி முடிவடைந்து விட்டதாகவும் — சில கிளை முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சில கிளைகளில் சீனிக்கு சிட்டை போடப்பட்டதாகவும் — பின்னர் சீனி இல்லை என்று தெரிவிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (இ-15)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## செல்வரத்தினம் நாகரத்தினம்

(இரத்தினம்)

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் நாகரத்தினம் 12 - 08 - 96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மு. செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சிவன்பாலன் (முன்னாள் அதிபர், உரும்பராய் இந்துக் கல்லூரி), சிவன்நேசன் (முன்னாள் பொறியியலாளர், மின்சார சபை, சுன்னாகம்), சிவன்தாசன் (முன்னாள் கணக்காளர், தபால் திணைக்களம்,கொழும்பு), சிவன்ரூபன் (அதிபர், யாழ். மத்திய கல்லூரி), சிவகாமி ஆகியோரின் அன்புமிகு தாயாரும், திருமதிகள் தவமணிதேவி, பத்மராணி, சிவபாக்கியம், விமலரஞ்சிதேவி, திரு. இ. சுந்தரலிங்கம் (பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சிவராஜினி இராசநாயகம், திருமதி சிவசொரூபி சத்தியபாலன், சிவன்சுதன்,சிவதவாணி, சிவானி, திருமதி சிவாஜினி கருணாகரன், சிவாஞ்சன், சிவாஞ்சலி, சிவகௌரி, சிவதர்சினி, திருமதி வாசுகி சுதர்சன், வசுமதி, வானதி, சரவணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மாதங்கி, சுபாங்கி, தீப்பிக்கா, அபிசிக்கா, ஜெனுஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் (13-08-1996) இன்று செவ்வாய்க்கிழமை பகல் 1 மணியளவில் அவரின் இலலத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
செ. சிவன்பாலன்
(மகன்)

உரும்பராய் தெற்கு,
உரும்பிராய்.

(42230)

## திருமதி நாகநாதர் பாக்கியம்

(தேவியக்கா)

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த திருமதி நாகநாதர் பாக்கியம் (தேவியக்கா), 11 - 08 - 96 ஞாயிறு காலமானார். அன்னார் நாகநாதரின் (பெரியண்ணை], அன்பு மனைவியும் புஸ்பராணி, றஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், முதலித்தம்பி (முன்னாள் இ. போ. ச), பரமேஸ்வரி, (ஓய்வு பெற்ற மருத்துவமாது), திலகவதி (ஓய்வு பெற்ற மருத்துவ மாது மேற்பார்வையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன், சுகிர்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதர்சனா, நிவேதனா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 08 - 96 திங்கட்கிழமை சுன்னாகம் தெற்கில் நடைபெற்றன.

தகவல்:
க. பத்மநாதன்.
(மருமகன்)

சுன்னாகம் தெற்கு,
மதவடி ஒழுங்கை,
சுன்னாகம்.

(42229)

# அறிவித்தல்

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தின்

ஆதரவில் கல்வி மேம்பாட்டிற்காக இதுவரை உதவிப்பணம் பெற்றுவந்த மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர் ஊடாக மீண்டும் விண்ணப்பிக்கவும்.

இயக்குனர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்,

07 இரத்தினம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(42231)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம்
அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி செல்லம் கார்த்திகேசு

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/ அருணோதயக் கல்லூரி,
ஆசிரியர் கழகம்.

(42232)

வெளிவந்துவிட்டது! பல்சுவை வார இதழ்!!

# திசை முகம்

புதுமையை வரவேற்கும் உங்களுக்கு சலுகை விலையில்!

★ பிரேமானந்தா — ஓர் உருத்திராட்சப் பூனை.
★ இந்தியன் — சாமானியன் அல்ல.
சினிமா விமர்சனம்
★ ஆழ்மனதின் அற்புத சக்திகள்
★ தொட்டால் தொலைந்தீர்கள் —
பெண்களையல்ல!
★ A R. ரகுமான் — சூடு தணிகிறதா?

இன்னும்பல அம்சங்களுடன்
உங்களை உற்சாகமூட்ட
ரூ. 1.50 சதத்திற்குக் கிடைக்கிறது

பூபாலசிங்கம் புத்தகசாலை
மக்மிலன் புத்தகசாலை
ஆகிய இடங்களில் விறுவிறுப்பான விற்பனையில்!

(சி/2751)

# காஷ்மீர் சட்ட சபைக்கான தேர்தலில் தேசிய மாநாட்டு கட்சி பங்கு பற்றும்

## செயற்குழு கூட்டத்தில் முடிவு

புதுடில்லி, ஒக. 13

ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக்கட்சி, அம்மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தல்களில் பங்கேற்பதென முடிவு செய்துள்ளது.

அக்கட்சியின் இரண்டு நாள் செயற்குழுக் கூட்டத்துக்குப் பின்னர் நேற்று முன்தினம் ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அதன் தலைவர் டாக்டர் பரூக் அப்துல்லா இது குறித்து அறிவித்தார்.

காஷ்மீரில் தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்படி மாநில நிர்வாகத்தையும், தேர்தல் ஆணையத்தையும் இவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்டுள்ள காஷ்மீர் மக்களின் நலன் கருதியும்,

மாநிலத்துக்கு சுயாட்சி அந்தஸ்து வழங்கப்படுவதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளதையடுத்தும் - தேர்தலில் பங்குகொள்ள தேசிய மாநாட்டுக் கட்சி முடிவு செய்ததாக அவர் தெரிவித்தார்.

## காஷ்மீர்த் தேர்தலை பாகிஸ்தான் நிராகரிப்பு

இஸ்லாமாபாத், ஒக. 13

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அடுத்த மாதம் தேர்தல்கள் நடத்தப்படுவதை பாகிஸ்தான் நிராகரிப்பதாக பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க செனட்டர் ஹங் பிரவுணுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே காஷ்மீர் தேர்தல்கள் குறித்தும் பெனாஸிர் பூட்டோ பிரஸ்தாபித்தார்.

காஷ்மீர் பிரச்சினை இந்தப் பிராந்தியத்தில் சமாதானத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யெல்ட்சின் பதவி ஏற்பு வைபவம்

மாஸ்கோ, ஒக. 13

ரஷ்ய அதிபராக மீண்டும் அதிபர் யெல்ட்சின் வெள்ளியன்று பதவி ஏற்றார்.

பதவி ஏற்பு வைபவம் 16 நிமிடங்களே நிடித்தது. சிரமப்பட்டு— உணர்வுகள் எதனையும் வெளிப்படுத்த முடியாத நிலையில்— அரங்குக்கு வந்த அவர் ஏற்கனவே தயாரித்த பதவி ஏற்பு வாக்குறுதியைக் கூறினார்.

அதற்கு அப்பால் ஒரு வார்த்தைகூட அவர் கூறவில்லை.

தொலைக்காட்சி படப்பிடிப்பாளர் எவரும் அருகில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (இ-3)

# செச்சின்ய கிளர்ச்சித் தலைவருடன் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரி பேச்சு

## குரொஸ்னியிலிருந்து மக்கள் வெளியேற்றம்

செச்சின்யாவில் சண்டை அதிகரித்துள்ள இந்த வேளை ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபக் தென் செச்சின்யா வந்துள்ளார்.

அவர் செச்சின்யாவின் பிரதான கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான அட்லாண்ட் மல்சடோவுடன் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ரஷ்யா உத்தியோகபூர்வமாக இது குறித்து அறிவிக்கவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து செச்சின்ய தலைநகர் குரொஸ்னி மீது செச்சின்ய பிரிவினைவாத கிளர்ச்சிப் படைகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்தது தெரிந்ததே.

தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்ஸினின் பதவி ஏற்பு வைபவத்தையொட்டி கிளர்ச்சிக்காரர்கள் தமது தாக்குதலை புதிதாக ஆரம்பித்திருந்தனர்.

குரொஸ்னியின் பெரும் பகுதி இன்றும் கிளர்ச்சிக்காரர் வசமே இருந்து வருகிறது.

இந்த சண்டையை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் குரொஸ்னியில் இருந்து வெளியேறியுள்ளனர்.

அதே சமயம் செச்சின்யாவில் ரஷ்யப்படைகள் எதிர்நோக்கிய தோல்வி குறித்து இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1905 ஆம் ஆண்டு ரஷ்ய கடற்படையை ஜப்பான் நாடு தாக்கி தோற்கடித்த நாளை தேசிய அவமான நாளாக அனுஷ்டித்து வரும் ரஷ்ய மக்கள்—

இப்போது செச்சின்ய தோல்வி நாளையும் தேசிய அவமான நாளாக அனுஷ்டிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை செச்சின்யாவின் தோல்விக்குக் காரணமான இராணுவத்தளபதிகள் மீது விசாரணை நடத்த ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

# உலக அரங்கில்

## பாக். - ஆப்கானிஸ்தான் உறவைச் சீராக்க முயற்சி

ஆப்கானிஸ்தானில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டைச் சீராக்க பாகிஸ்தான் உதவும்.

ஆப்கானிஸ்தான் பிரதிநிதி பாகிஸ்தான் பிரதிநிதிகளிடம் நடத்திய பேச்சு வார்த்தையின் போது இது தொடர்பான இணக்கம் ஏற்பட்டது.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்ப இணங்கியுள்ளதாகவும்—

காபூலில் பாகிஸ்தான் தூதரகத்தைத் திறக்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும்— பி. பி. ஸி. தெரிவித்தது.

காபூரில் ஆயிரக்கணக்கான மக்கள் போதிய உணவின்றிக் கஷ்டப்படுவதாகவும் பி.பி. ஸி தெரிவித்தது.

காபூலில் இயங்கிய பாகிஸ்தான் தூதரகம் கடந்த வருடம் எரிக்கப்பட்டிருந்தது. (இ-3)

## காவிரி தண்ணீர்ப் பங்கீடு தீர்வு ஏற்படும் நிலையில்

புதுடில்லி, ஒக. 13

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் கர்நாடகத்துக்கும் — தமிழ் நாட்டுக்கும் இடையே சுமுகமான தீர்வு ஒன்று உருவாகி வருகிறது என்று கர்நாடக முதலமைச்சர் ஜே. எச். பட்டீல் தெரிவித்தார்.

இரு மாநிலங்களின் மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இரு மாநில அரசுகளும் உறுதி பூண்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்த விடயத்தில் உச்ச நீதி மன்றத்தின் உத்தரவைப் பின்பற்றி வருவதாகவும் —

இப்போது நிலைமை சுலபமாகி விட்டதாகவும் — அவர் தெரிவித்தார். (இ-3)

# கர்நாடக – ஆந்திர மாநிலங்களில் பிரச்சினையைத் தீர்க்க குழு நியமனம்

புதுடில்லி, ஒக. 13

கர்நாடக மாநிலத்தின் அலமத்தியா அணையை உயர்த்திக்கட்டுவது தொடர்பாக ஆந்திர — கர்நாடக மாநிலங்களுக்கு இடையில் உருவாகியுள்ள கருத்து வேறுபாட்டுக்குத் தீர்வுகாண விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு, பீஹார் முதல்வர் லலு பிரசாத்யாதவ், அஸாம் முதல்வர் பிரபல்ல குமார்மெகந்தா ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நான்கு முதல்வர்களும் நேற்று கூடி இது குறித்து ஆராய விருந்தனர்.

கர்நாடகத்துக்கும், ஆந்திரப் பிரதேசத்துக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை நீக்க பிரதமர் தேவகௌடா முயற்சி மேற்கொண்டாராயினும் இணக்க நிலை ஏற்படவில்லை. இதனை அடுத்தே முதல்வர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் அலமத்தியா அணை கட்டுவதால் ஆந்திரப் பிரதேசத்துக்கான கிருஷ்ணா நதி நீர்ப்பங்கீடு பாதிக்கப்படுமென தெலுங்கு தேசக் கட்சி தெரிவித்துள்ளது.

(இ-3)

## சாவகச்சேரிப் பகுதியில் மின் விநியோகம் சீர்கேடு

தென்மராட்சி, ஒக. 13

இலங்கை மின்சார சபையினால் ஜெனரேற்றர் மூலம் சாவகச்சேரி நகரப் பகுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் குறித்து பொதுமக்களிடையே பெரும் அதிருப்தி நிலவுகிறது.

முன்னர் காலை 6-30 மணி தொடக்கம் இரவு10-00 மணி வரை வழங்கப்பட்ட மின்சாரம் கடந்த ஒரு மாதமாக ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்றும்—

தினமும் 15 நிமிடங்கள் முதல் ஒரு மணித்தியாலம் மட்டுமே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மின்சார சபையினரோ ''டீசல் இல்லை'' ''லோட்'' கூடி விட்டது போன்ற காரணங்களைக் கூறி சமாளித்து வருவதாக மக்கள் குறைப்படுகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களாக மண்எண்ணெய் விளக்குடன் காலத்தை கடத்திய தாம் மின்சாரம் கிடைக்கும் என்று நம்பி ஏமாறுவதாக மக்கள் மேலும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

(இ-31-117)

## இரவில் வெளியே வந்தவருக்கு கத்தி வெட்டு

இரவுவேளை வீட்டில் இருந்து வெளியே சிறுநீர் கழிக்கச் சென்றவர் இனந்தெரியாதவர்களின் கத்தி வெட்டுக்கிலக்காகி படுகாயமடைந்தார்.

ஈவினையில் நேற்று முன் தினமிரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சின்னத்துரை விஸ்வநாதன்(வயது 55) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இருட்டில் மறைந்திருந்து வெட்டியதால் வெட்டியவரை இனங்காணமுடியவில்லை என காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## வில்லூன்றியில் இன்று

கொழும்புத்துறை ஒக. 13

வில்லூன்றி புனித சத்திரத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவமும், தர்ப்பணாதி அனுஷ்டானங்களும் வழமைபோல் நடைபெறும்.

பழைய நேரப்படி காலை 6 மணி தொடக்கம் விசேட அபிஷேக பூசை ஆராதனை வழிபாடுகளும், 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், 8 - 15 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரியும், 9 மணி முதல் 12 மணி வரை தமிழோடு இசை பாடும் விசேட நிகழ்ச்சி புனித தீர்த்த இளைப்பாறு மண்டபத்திலும் நடைபெறும்.

(அ-30)

## தேங்கிக்கிடக்கும் ஒய்வூதிய வவுச்சர்கள்

வேலணை தபாற்கந்தோரில் பெரும்பாலான ஒய்வூதிய வவுச்சர்கள் உரியவர்கள் எடுக்காது தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-30)

## ஆஸ்பத்திரிக்கு வருவோரின் சைக்கிள்கள் வெளியே

### பாதுகாப்பு நிலையம் இல்லை

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ் போதனா வைத்திய சாலையில் பொது மக்களுக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இல்லாததால் வைத்தியசாலைக்கு வருவோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிள்கள் ஆஸ்பத்திரிக்கு வெளியே வீதியில் நிறுத்தப்படுவதால் அவை களவு போகின்றன.

அதே சமயம் வெயில் காரணமாக சைக்கிள்கள் காற்றுப் போகும் பிரச்சினையும் இருந்து வருகிறது.

வலிகாமத்துக்கு மக்கள் மீளக்குடியேறி ஆஸ்பத்திரி முழுமையாக இயங்க ஆரம்பித்தபோது சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆஸ்பத்திரிக்கு உள்ளே முன்னைய இடத்திலேயே இயங்கி வந்தது. எனினும் பின்னர் ஆஸ்பத்திரி அம்புலன்ஸை அந்த இடத்தில் நிறுத்த வேண்டி இருந்ததால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மூடப்பட்டது.

வெளியே விடப்பட்ட சைக்கிள்களில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் நான்கு சைக்கிள்கள் காணமற்போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ)

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம் ஒக. 13

நீராவியடி ஜெய் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 30 மணி அளவில் கோயில் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சு. ஸ்ரீதர குருக்கள் தலைமையில் கணபதி ஓமம் சங்காபிஷேகம் கிரிகை நடைபெறும். (இ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(41870)

### ஒலிப் பதிவாளர்

5 வருட முன் அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பங்களை: மே/பா, இல:- 512, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும்
[சி-2742]

### விண்ணப்பப் படிவம்

தபால் சேவையின் இரண்டாம்தர பதவிகளுக்கான படிவவிவரம் விற்பனையாகிறது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா 5/- பெறுமதியான முத்திரையும், சுயவிலாசம் இட்ட நீண்ட தபால் உறையும் அனுப்பவும். நாயகபாலன், புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (422,23)

### ஒப்படைக்கவும்

தனபாலசிங்கம் என்பவரால் மிருசுவில் Church இல் வைத்து ஒப்படைக்கப்பட்ட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை இன்னமும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. பெற்றுக் கொண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். ச. சுந்தர கணேசன், 183, A.V. றோட் அரியாலை. (42224)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- ரவி, 148, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(42226)

## குப்பிளானில் மிதிவெடி

யாழ்ப்பாணம் ஒக. 13

நண்பர்களுடன் கதைத்து விட்டு வீடு திரும்பியவர் பாதையில் இருந்த மிதிவெடியில் சிக்கினார். அவரது வலது கால் கணுக்காலுடன் துண்டிக்கப்பட்டது.

குப்பிளானில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குப்பிளான் தெற்கைச்சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## இலவச மூக்கு கண்ணாடி

தென்மராட்சி பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியில் இலவச மூக்குக்கண்ணாடி, காது கேட்கும் கருவி ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவிகள் ஆகியவை பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

இவற்றுக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியில் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.
(இ-117)


## புதிய முறையில் ஆங்கில வகுப்புகள்

ஐந்து வகுப்புகள் மூலம் [புதிய N. R. T. முறை] ஆங்கிலம் இலகுவில் எழுதப் பேசக் கற்பிக்கப்படும்.

வகுப்பு நேரம்:
பி. ப. 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

விவரங்களுக்கு:-
275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[42227]


## சைவ சமய விளக்கப் பயிற்சி வகுப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் **1996 - 09 - 03** செவ்வாய்க்கிழமை தொடக்கம் மேற்படி வகுப்புகள் காலை **9-00** மணி முதல் **10** தினங்கள் நடைபெறவுள்ளன. **40** வயதுக்குட்பட்டோர் விண்ணப்பித்துக் கலந்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் **96 - 08 - 20** ஆம் திகதிக்கு முன்பதாக ஆதீனத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆதீன முதல்வரின் அருளாணையின் வண்ணம்
ஆதீன மேலாளர்.

(C/2748)




மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!
செவ்வாய், வியாழன், சனி
காலை 8-30 மணி முதல் பகல் 12-30 மணி வரை
யாழ். வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

## லாவண்யா

பல் மூக்குக் கண்ணாடி அகம்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2729)


## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



இமெல்டா பொன்றோஸ் டோமினிக்
(மம்மி)

அன்னை மடியில்: **15-05-1933**
ஆண்டவன் அரவணைப்பில்: **13-8-1989**

இடம் பெயர்ந்தோம், இடர்ப்பட்டோம், இனியவள் நீ இல்லாமல் வழி நடந்தோம், வன்னி வந்தோம், வாடி அங்கு நாமிருந்தோம். வான் அரசி நீ வந்து வழியதனைச் செப்பியதால் வலுவுற்றோம். வாழ்கின்றோம் உன் நினைவாய்; வடிவழகே வந்து விடு.

இவரின் ஆன்ம சாந்தி திருப்பலி 14-8-96 காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெறும்.

உன்னை நினைத்து ஏங்கும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

33, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (42113)

### நல்லூர் உற்சவ காலம்:

# தொண்டர்களது பணி மன உறுதியுடன் வேண்டும்

## மாநகர ஆணையாளர் ஆலோசனை

கொழும்புத்துறை, ஒக. 13

நல்லூர் மகோற்சவ காலத்தில் நாம் செய்யும் பணிகளை இம்முறையும் வழமை போல் ஆற்றலாம் என்ற மன உறுதியுடனும். இறைவன் எங்களை வழிநடத்துவார் என்ற நம்பிக்கையுடனும் இக்கடமையைச் செய்ய வேண்டும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ காலத்தில் தொண்டர்களாகப் பணிபுரிவோருக்கான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை யாழ். மாநகர சபை இந்து விடுதியில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் நாம் எல்லோரும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனினும் ஆண்டவனுக்கான தொண்டினைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்—

இச்சேவையில் ஈடுபட்டிருக்கும் சகலரும் தாம் சார்ந்துள்ள நிறுவனங்களின் வளங்களை இறைபணிக்கு அர்ப்பணிக்கப் பின் நிற்கக்கூடாது. ஆகவே நிர்வாகத்துடனும், மாநகர சபையுடனும் ஒத்துழைத்து இணைந்து பணியாற்றுவது நற்பயன் தரும்— என்றும் மாநகர ஆணையாளர் சொன்னார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை, யாழ். மாவட்ட சாரணர் சங்கம், யாழ். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன் காக்கும் பிரிவு, மாநகரசபை ஊழியர்கள் உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் பங்குபற்றினர். (அ-30)

## ஆங்கிலத்தில் நிரப்ப அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 13

தமிழ் மொழியில் அச்சிடப்பட்டுள்ள படிவத்தை ஆங்கில மொழியில் நிரப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் சுயவிவரங்களையும் சேவை விவரங்களையும் உள்ளடக்கிய 36 தகவல்களைக் கொண்ட படிவம் ஒன்று தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக ஆங்கிலத்தில் அதனைப் பூரணப்படுத்தி அதிபர்களிடம் கையளிக்குமாறு கோட்டக்கல்வி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.
(இ-11)

## காஷ்மீர் தேர்தல்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தலாக இருந்து வருவதாக பெனாஸிர் பூட்டோ அமெரிக்க செனட்டரிடம் தெரிவித்தார்.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சில் ஈடுபடவேண்டும் என்று அமெரிக்க செனட்டர் கூறியுள்ளார். (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள பிரதம எழுதுநர்
திருமதி தெ. சாந்தகுமாரன் அவர்களின் மாமனார்

**திரு. பொன்னையா சுப்பையா**

அவர்களுக்கு எமது கண்ணீரஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் திடீர் மறைவையொட்டித் துன்புறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மோட்டார் போக்குவரத்து
திணைக்கள உத்தியோகத்தர்கள்
யாழ். செயலகம்.

(42228)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: **01–11–1956**
உதிர்வு: **04–07–1996**

**அமரர் கிருஷ்ணன் வரதராசா**

எங்கள் குடும்பத்து ஒளிவிளக்காய்த் திகழ்ந்த உங்கள் அகால மரணம் எங்களை இருளில் மூழ்கடித்து விட்டது.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களது நீங்கா நினைவில்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்

துரை வீதி,
தாவடி.

தகவல்;
சி. கந்தசாமி.

(42201)

உதயன்

## சங்கடமான சமையல்!

வடக்கு - கிழக்குப் போர், முல்லைத்தீவு இராணுவத் தளம் வீழ்ந்த விவகாரம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, தெரிவுக் குழுவில் முரண்பாடுகள், பொருளாதாரத்தின் மோசமான நிலை, வாழ்க்கைச் செலவு உயர்வு, மானியங்களை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிகளிடையே கருத்து வேறுபாடு என்று இன்னோரன்ன பிரச்சினைகள் அரசாங்கத்தின் தலையை அமுக்கிக்கொண்டிருக்கின்றன.

இந்த இக்கட்டான வேளையில் சந்திரிகாவுக்கு புதிய தலையிடி ஒன்று சேர்ந்துள்ளது. அரசில் அமைச்சராக அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தொண்டமானே அந்தப் புதிய தலையிடியைக் கொடுத்திருக்கிறார்.

1964 ஆம் ஆண்டில் கைச்சாத்தாகிய இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் (சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின்) பிரகாரம் மலையகத் தமிழர்களில் இன்னும் 1,60,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதை விரைவு படுத்த வேண்டும் என்பதே அமைச்சர் தொண்டமான் போட்டுள்ள குண்டு.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை போலவே, மலையகத் தமிழருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் விவகாரமும் நீண்டகாலப் பிரச்சினை. 32 வருடங்களுக்கு முந்திய ஒப்பந்தத்தின் நடைமுறைப் பிரச்சினை.

1964 ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம்—

அப்போது நாடற்ற பிரஜைகளாகக் கருதப்பட்ட தோட்டத் தொழிலாளர்களில் 5,25,000 பேருக்கு இந்தியப் பிரசாவுரிமையும் 3,75,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையும் வழங்கப்பட வேண்டும்.

ஒப்பந்த அமுலைத் தாமதப்படுத்தியதில் இலங்கைக்கே அதிக பங்கு உண்டு. அதனால் ஒப்பந்தப் பிரகாரம் இன்னமும் 1,60,000 மலையகத் தமிழர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெறத் தகுதியுடையவர்களாக உள்ளனர்.

செல்லச்சாமியைப் பயன்படுத்தி, மலையகத் தமிழர்களின் தலைமைப் பதவியிலிருந்து தன்னை வீழ்த்துவதற்கு சந்திரிகா முயற்சிக்கிறார் என்ற வெறுப்பு ஏற்கனவே தொண்டமான் மனதில் உண்டு.

பிரஜாவுரிமை விடயத்தில் சந்திரிகா தட்டிக்கழிக்க முற்பட்டால், தாமதம் செய்யத் திட்டமிட்டால், நாடாளுமன்றத்தில் தனக்குள்ள வாக்குப் பலத்தைப் பயன்படுத்தி சந்திரிகாவுக்குத் தொல்லை கொடுப்பது தொண்டமானுக்கு ஒன்றும் கஷ்டமானதல்ல. உரிய வேளையில் தக்க சீட்டைப் போட்டு, அரசியல் வெற்றி ஈட்டுவதில் வல்லவர் தொண்டமான்.

ஆவின, மழை பொழிய, இல்லம் வீழ, அகத்தடியாள் மெய்நோக, அடிமை சாக, மா ஈரம் போகுதென்று விதை கொண்டோட என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது சந்திரிகா அரசு.

தமது அரசின் பதவிக் காலத்தை ஜனாதிபதி எப்படித் தக்க வைக்கப் போகிறார் என்பது சங்கடமான சமையலாகவே இருக்கப் போகிறது...!

---

### யாழ். மாவட்டத்தில்

# 4 பிரதேச செயலகங்கள் இயங்குவதற்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகியவை மத்திய அரசினால் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், கரவெட்டி, சங்கானை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாகப் பிரகடனப்படுத்தப்படும் எனத் தெரியவருகின்றது.

மத்திய அரசாங்கத்தின் இந்நடவடிக்கையினால் விரைவில் குடாநாட்டில் அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதேச செயலகங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட நான்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளும் தற்பொழுது உடனடியாகச் செயற்படும் விதத்தில் மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சின் கீழான பிரதேச செயலகங்களாகத் தொழிற்படும்.

நிதி, மாவட்ட அபிவிருத்தி இணைப்பு ஆகிய விடயங்களில் அரச அதிபர் சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும் அதே வேளையில், பிரதேச செயலகங்கள் தன்னாட்சி இறைமையுள்ள முதலாம் தர திணைக்களங்களாகச் செயற்படும்.

ஓய்வூதியப் பணி உள்ளிட்ட பன்முக வரவு செலவுத் திட்டத்துடன் பல்வேறு பணிகள் தொடர்பான தீர்மானங்கள் பிரதேச மட்டத்திலேயே பிரதேச செயலகங்கள் ஊடாக சுதந்திரமாக எடுக்கப்படும்.

மாகாண சபை கையளிக்கும் விடயங்களை மத்திய அரசின் நோக்கிற்கும் போக்கிற்கும் அமைய செயற்படுத்தும் அதிகாரமும் பிரதேச செயலகங்களுக்கு உண்டு. இறுதி நோக்கில் மக்கள் மாவட்ட செயலகத்துக்கு அலைந்து திரியும் நடைமுறைகள் நீங்கி தமக்குச் சமீபமாகவுள்ள பிரதேச செயலகங்களிலேயே பெரும்பாலான நிர்வாக தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## தொண்டர்கூட்டம்

யாழ்ப்பாணம் ஓக. 13

அனைத்துத் தொண்டர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். மக்கள் நலன்புரிச் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## புகைப்பட துறையினருக்கு அழைப்பு

குடாநாட்டில் அடையாள அட்டைக்கு படம் எடுக்க புகைப்படத் துறையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு புகைப்படம் எடுக்க தகுதிவாய்ந்த புகைப்படம் எடுப்பவர்கள் அல்லது புகைப்படம் எடுக்க விரும்புபவர்கள் தத்தமது பிரதேச செயலாளரின் சிபார்சுடன் நாளை புதன்கிழமை தமது அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு ஆள்பதிவு திணைக்கள உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

படம்பிடிக்கத் தேவையான உபகரணங்கள் அடங்கிய பட்டியலையும் கொண்டு வருமாறு அவர் கேட்டுள்ளார்.

## வாழை, வெங்காயம் பயிரிடுவதில் நாட்டம்

வலிகாமம் தெற்கு, ஓக. 13

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய விவசாயிகளில் அநேகமானோர் தற்போது வெங்காயம், வாழை, மரக்கறி, சிறுதானியம் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உடுவில் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் அண்மையில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டப்பட்ட புள்ளிவிவரத்தின்படி அநேகமான நிலப்பரப்பில் வெங்காயமும் வாழையுமே பயிரிடப்பட்டுள்ளன.

உடுவில், சங்குவேலி, இணுவில், தாவடி, சுன்னாகம், கந்தரோடை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தஆயிரத்து 405 விவசாயிகள் மேற்படி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வெங்காயம், வாழை, மரக்கறி, சிறுதானிய உற்பத்திக்கு மேற்படி கிராமங்களில் 11 ஆயிரத்து 50 பரப்பு [276.4 ஹெக்டேயர்] நிலம் பயன்படுத்தப்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

3192 பரப்பு நிலத்தில்(79.8 ஹெக்டேயர்)வெங்காயமும்—

2579 பரப்பு நிலத்தில் (64.4 ஹெக்டேயர்) வாழையும் —

4368.5 பரப்பு நிலத்தில் (98.2 ஹெக்டேயர்) மிளகாய், கத்தரி, வெண்டி, பயற்றங்காய், தக்காளி, கரட் போன்ற மரக்கறிப் பயிர்களும் —

919.5 பரப்பளவில் (34 ஹெக்டேயர்) குரக்கன், பயறு, கௌபி போன்ற சிறுதானியப் பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் பிரிவினரும், உடுவில் கமநல சேவை நிலையத்தினரும் தேவையான விதை தானியங்கள், எரிபொருள், உரம், கிருமிநாசினி போன்றவற்றை மானிய அடிப்படையில் வழங்கி பயிர்ச்செய்கை உற்பத்திக்கு ஊக்கம் அளித்து வருகின்றனர். (இ-152)

# இன்று ஆடி அமாவாசை: பிதிர்க்கடனுக்கு சிறந்தநாள்

எம்மை விட்டுப் பிரிந்த எம் முன்னோரை நினைவு கூர்ந்து அவர்கள் நலனுக்காகப் பிரார்த்தித்து விரதமிருந்து அதன்மூலம் நம் முன்னோரும் நாமும் நன்மையடையவும் நமது பிற்காலச் சந்ததி தழைத்தோங்கவும் வழிவகுக்கும் ஒரு புனிதமான விரத நாள் ஆடி அமாவாசை.

சூரியனைத் தந்தைக்குரியவனாகவும், சந்திரனைத் தாய்க்குரியவனாகவும் கொள்வது மரபு. சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே நேர்படும் நாள்கள் நம் தந்தை வழி முன்னோரை நினைவுகூர ஏற்ற நாள்களாகின்றன. இந்நாள்களே அமாவாசைத் தினங்கள்.

இவற்றுள்ளும் ஆடிமாதத்து அமாவாசை மிகச் சிறந்தது. ஏனெனில் நம்முன்னோரின் நலன்களைக் கவனிப்பவர்களான பிதிர்த்தேவதைகள் எனப்படும் தென்புலத்தாருக்கு உரிய திசை தெற்கு. சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்க ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம். ஆகவே ஆடி அமாவாசை பிதிர்க்கடனாற்றச் சிறந்த தினமாக அமைகிறது.

பிதிர்க்கடனை மிக்க பயபக்தியுடனும், சிரத்தையுடனும் செய்தால் செல்வம், ஆயுள், கீர்த்தி, சுவர்க்கம் முதலிய நன்மைகள் கிட்டுவதுடன், சந்ததி தழைத்தோங்கும்; எதிரிகள் நீங்குவர் எனச் சமய நூல்கள் கூறுகின்றன. பிதிர்க் கடனாற்றாவிடின் பித்ரு சாபத்திற்கு ஆளாகி வம்சம் விளங்காமற் போகும் எனவும் நூல்கள் எச்சரிக்கின்றன.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசையன்று தீர்த்த சங்கற்பம் செய்து சமுத்திரத்தில் அல்லது சமுத்திரத்தோடு இணைந்த புண்ணிய நீர் நிலையில் தீர்த்தமாடுவர். தீர்த்த நீரை இறைவனது அருள் நீராக, எம்பாவங்களைக் கழுவும் புனித நீராக நினைந்து, நம் முன்னோரை மனத்திருத்தி அவர்களுடைய பாவங்கள் அகன்று அவர்களுக்கு நற்பேறு கிடைக்க வேண்டுமெனப் பரம்பொருளை வேண்டித் தீர்த்தமாடுவர்.

தீர்த்தமாடியபின் எள்ளும் நீரும் கொண்டு பிதிர்த் தர்ப்பணம் செய்வர்.

தர்ப்பணம் என்பது (பிதிரர்களைத்) திருப்திப்படுத்துதல் எனப் பொருள்படும். தர்ப்பணத்தில் எள்ளும் தர்ப்பைப் புல்லும் முக்கிய பங்கு வகிக்கிறது. இவையிரண்டும் விஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது. கெட்ட தேவதைகளின் பரமவைரியான விஷ்ணுவிற்குகந்த எள்ளையும் தர்ப்பையையும் பாவிப்பதன்மூலம் கெட்ட தேவதைகளால் உண்டாகும் இடர் நீங்கும்.

ஈழத்தில் திருக்கேதீஸ்வர பாலாவித் தீர்த்தமும், கீரிமலை நகுலேஸ்வரர் புண்ணிய தீர்த்தமும், வில்லூன்றி புனித தீர்த்தமும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத் தீர்த்தமும், கொழும்பு முகத்துவாரத்தில் கடலோடு சங்கமிக்கும் புனித தீர்த்தமும், இந்தியாவில் இராமநாதர் க்ஷேத்திர இராமேஸ்வர தீர்த்தமும், கங்கை, யமுனை,கோதாவரி,நர்மதா, சிந்து,காவேரி முதலாய புனித கங்கைகளும் பிதிர்களுக்கு தீர்த்த பிராப்தம் செய்யச் சிறப்பான இடங்களாகும்.

யாழ்ப்பாணத்தில் கீரிமலைக்குப் போக முடியாதவாறு கடந்த பல வருடங்களாகத் தடங்கல்கள் ஏற்பட்ட சூழ்நிலையில் வில்லூன்றி ஒன்றே பிதிர்க்கடன் ஆற்ற ஒரேயொரு தலமாக உள்ளது.

சமுத்திர சங்கம புண்ணிய தீர்த்தமாகிய ''பூர்வதனுக்கோடி'' எனும் சிறப்புப் பெயர் பெற்றது வில்லூன்றி க்ஷேத்திரம்.

சைவப் பெருமக்கள் ஆடி அமாவாசை பிதிர்த் தர்ப்பணத்தை உரிய முறையில் பக்தி பூர்வமாக நிறைவேற்ற அனைத்து வசதிகளும் இம்முறையும் வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபையால் செய்யப்பட்டுள்ளது.

பேராசிரியர்
இ. குமாரவடிவேல்

## திருவிழாக் களியாட்டம் தேவையா?

யாழ். மாநகர சபை நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஐஸ்கிறீம் கடைகள் மற்றும் கடைகளுக்கு இடம் கொடுப்பதற்கு ரெண்டர் கேட்டிருப்பதனையிட்டு வேதனைப்படும் உள்ளங்களில் நானும் ஒருவன்.

தற்சமயம் யாழ்ப்பாண மாநகரம் இருக்கும் நிலையில், மக்களின் அன்றாட கவலைகள் ஒரு புறம்; வீடுகளை இழந்த, சேதமடைந்த, மக்களின் வேதனைகள் ஒரு புறம்; வன்னியில் காடுகளில் தஞ்சமடைந்து உணவுமின்றி பட்டினியால் வாடும் எமது சகோதரர்கள் படும் துயரம் ஒரு புறம். நிலைமை இந்தளவு மோசமாக இருக்கும் போது யாழ் மாநகர சபையின் வரிக்களியாட்டம் அவசியம் தானா? ஒவ்வொரு மக்களும் இதனைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

### வாசகர் திருமுகம்

போரினால் யாழ். மாநகர சபைப் பகுதியில் சிதைந்த வீதிகள் திருத்தப்படவில்லை; சுகாதாரச் சீர்கேடுகள் நீக்கப்படவில்லை; நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவில்லை; வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை; நூலகங்கள் செயற்படவில்லை.

இப்படியிருக்க, நல்லூர்த் திருவிழாக் காலத்தை களியாட்டமாக்குவதற்கான ஏற்பாடுகள் அவசியம் தானா? இதனை மாநகரசபை மட்டுமன்றி மக்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

எஸ். ஆனந்தம்

ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

## காரைநகர் மக்களின் நிலை

காரைநகருக்குச் செல்லும் ஒரேயொரு தரைவழிப் பாதையான பொன்னாலைப் பாலம் தற்போது மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக காரைநகர் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணைத் தாம்போதி ஊடாக ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்து வள்ளத்தில் காரைநகர் கரையை அடைய வேண்டும். வயது போனவர்கள், வலது குறைந்தவர்கள் இந்த வள்ளங்களில் ஏறி இறங்க கஷ்டப்படுகிறார்கள்.

மாரிகாலத்தில் கடற்பெருக்குக் காரணமாக பண்ணைப் பாதையில் நீர் மட்டம் அதிகரித்து வாகனப் போக்குவரத்துத் தடைப்படுவது வழக்கம். எனவே காரைநகருக்கும் பொன்னாலைக்குமிடையே உடைந்த நிலையில் உள்ள பாலத்தை திருத்தி மாரிகாலம் ஆரம்பிக்கு முன்னர் பஸ் போக்குவரத்துக்கு வழி செய்யுமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

105, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

சு.ஆலாலசுந்தரம்

# உணவுப்பொருள் வந்துசேராவிடில்

# பெரும் பட்டினி, பஞ்சம் ஏற்படும்

## கிளிநொச்சி அரச அதிபர் அரசுக்கு அவசர அறிக்கை

மணிலா, ஒக. 13

கிளிநொச்சிப் பகுதிக்கு உடனடியாக உணவுப் பொருள்கள் அனுப்பப்படாவிட்டால் கடும் பஞ்சமும் அழிவும் ஏற்படும்.

இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லை நடராஜா அரசுக்கு அனுப்பியுள்ள அவசர அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கைக்குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை எவ்வித பாதுகாப்பும் அற்ற காட்டுப் பகுதிகளில் மரங்களுக்கு அடியில் ஆயிரக் கணக்கில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுப்பொருள்கள் எதுவும் கையிருப்பில் இல்லை. கடும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது. நெடுந்தூரம் நடந்து சென்று மக்கள் அழுக்குத்தண்ணீரைச் சுமந்து வருவதைத்தான் பார்க்க முடிகிறது.

ஒட்டுமொத்த சூழலே ஆபத்து நிறைந்ததாகவும் மக்களிடையே மனச்சிதைவு நிலையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் பணிபுரிந்த பணியாளர்களும் அரச ஊழியர்களும் அகதிகளாகியுள்ளார்கள்.

அரசு உடனே உணவுப் பொருள்களையும் தற்காலிக உறைவிட வசதிக்கான பொருள்களையும் அனுப்பி வைக்கவேண்டும் —

இப்படி அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார், (இ-3)

## ஜெயலலிதா மனு தீர்ப்பு இன்று

தாம் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக முன்பிணை அனுமதி கோரி செல்வி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு இரு தரப்பினது வாதங்களைக் கேட்ட உயர் நீதிமன்ற நீதிபதி சிவப்பா மனு மீதான தீர்ப்பை இன்று வழங்குவதாகத் தெரிவித்தார். (இ-10)

### இந்தியத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

''ஈழத் தமிழர்களைக் கொல்லாதே!'', ''மத்திய அரசே! மாநில அரசே!! ஈழத் தமிழனைக் காப்பாற்று'' — என்று கோஷங்கள் எழுப்பியவாறு உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக விசாரணையின்றி ஐந்து ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் உண்ணாவிரதிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

''தமிழர் மீதான தாக்குதல் நிறுத்தப்படும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று முதல்வர் கருணாநிதிக்கு மனுக் கொடுத்து விட்டுத்தான் இப்போராட்டதை ஆரம்பித்தோம்'' — என்று போராட்டத்தை முன்னின்று நடத்தும் பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணி அமைப்பாளர் சக்தி கமலாம்பாள் தெரிவித்தார். (உ-3)

### 5 நாள்களில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பகுதிக்கோ செல்ல முடியாது. அதனால் அவர்கள் காடுகள் ஊடாக மன்னார்ப் பகுதிக்கு வந்து எப்படியோ வள்ளங்கள் மூலம் தமிழ்நாடு வருகின்றார்கள். ஸ்ரீலங்கா கடற்படையினர் இடமளிப்பார்களேயானால் சுமார் 3 லட்சம் அகதிகள் இந்தியா வரத் தயாராக உள்ளனர் என இங்கு ஏற்கனவே வந்திருக்கும் அகதிகள் கூறுகின்றனர் — என்றார்.

''விடுதலைப் புலிகளே இந்த அகதிகளைப் பலாத்காரமாக இந்திய மீன்பிடி வள்ளங்கள் மூலம் இந்தியாவுக்கு அனுப்புகின்றார்கள் என்று தகவல் வெளிவந்துள்ளதே? — என்று பி.பி.ஸி. சிங்களச் செய்தியாளர் கேட்டதற்கு —

''அப்படியான தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை.'' — என்று சுந்தரபாண்டியன் பதிலளித்தார்.

''விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே மாத்திரம் யுத்தம் நடைபெற்றால் அது பற்றி எமக்குக் கவலையில்லை. ஆனால் குண்டுகள் எங்கள் தலை மீதல்லவா விழுகிறது? அதனால் தான் நாங்கள் பிள்ளை குட்டிகளுடன் உயிர் தப்புவதற்காக இந்தியா வருகிறோம்.'' என தமிழகம் வந்த அகதிகள் கூறுவதாகவும் அவர் சொன்னார். (உ-10)

### உணவு லொறிகள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டன.

இது படிப்படியாக பின்னர் அந்த அந்த மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் ப. நோ. கூ. சங்கங்களின் பொறுப்பில் விடப்பட்டன.

*தாண்டிக்குளத்தில் கட்டுப்பாடு*

நாட்டின் தலைநகரான கொழும்பில் நடந்த தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள் போன்றவற்றை அடுத்து —

உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லும் லொறிகள் மூலமாகவே வெடிப் பொருள்களும், ஆயுதங்களும் வடக்கில் இருந்து கொழும்புக்கு கடத்தப்படுகின்றன என்ற சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து —

தாண்டிக்குளம் ஊடான போக்கு வரத்தின் நடைமுறையில் பாதுகாப்புப் பகுதியினர் பல மாற்றங்களை ஏற்படுத்தினர்.

இதன்படி —

பொருள்களை இறக்கிஏற்றுகின்ற (Cross Loading) நடைமுறை கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.

வவுனியா நகரில் இருந்து பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் தாண்டிக் குளத்துக்கும்— நொச்சிமோட்டைக்கும் இடையில் உள்ள சாந்தசோலையில் பொருள்களை இறக்கி விட்டு நகருக்குள் திரும்பி வந்துவிட வேண்டும்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வரும் லொறிகள் சாந்தசோலைக்கு வந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு திரும்பிச் செல்ல வேண்டும்.

இந்த இறக்கி, ஏற்றும் நடைமுறையின் பிரகாரம் வடக்கில் இருந்து வரும் வாகனங்களும், வவுனியா நகரில் இருந்து செல்லும் லொறிகளும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் சந்திக்க முடியாது; நேரடியான தொடர்பு எதனையும் கொள்ளவும் முடியாது.

*சிக்கல் நிறைந்த போக்குவரத்து*

இவ்வாறான சிக்கலும், கடுமையும் நிறைந்த பாதுகாப்பு நடைமுறையின் மூலமே வாகன தொடரணி ஊடான உணவு விநியோகம் நடைபெற்று வருகிறது.

தெற்கில் கொழும்பிலோ அல்லது வடக்கில் எங்கோ ஓர் இடத்திலோ அசம்பாவிதம் அல்லது கடும் மோதல்கள் இடம்பெற்றால் உடனடியாகவே தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்தும் வாகன அணியும் ஸ்தம்பிதம் அடைந்து விடும்.

பாதுகாப்புத்துறை அதிகாரிகள், சிவில் நிர்வாகிகள், புலிகள், வாகன உரிமையாளர்கள், சாரதிகள், பொருள்களை இறக்கி ஏற்றும் தொழிலாளர்கள் என பலதரப்பட்ட பிரிவினர் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய நுட்பமான பணியாகவே வாகன தொடரணி மூலமான உணவு விநியோகப்பணி உள்ளது.

இதில் தொடர்புடைய ஏதேனும் ஒரு பகுதியினர் உரிய நேரத்தில் ஒத்துழைக்காதுவிட்டால் அல்லது சிறிது தாமதம் காட்டினாலும்கூட உணவு விநியோகப்பணி நடைபெறாது; உணவு வண்டிகள் நகரமாட்டா.

அதிலும் குறிப்பாக போர் முனைகளில் ஏற்படுகின்ற வெற்றி — தோல்விகள், அதனால் விளைகின்ற இருதரப்பு உணர்வுகளும் கூட இந்த உணவு விநியோக பணியையும், தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து நடைமுறைகளையும் பாதிக்கும் சக்தியுடையனவாக இருக்கின்றன.

நேற்று மாலை 5 மணிக்கு புறப்பட்ட 10 லொறிகள் இன்று காலை விநியோகப் பகுதிக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கலாம்— என்றார். (உ-3)

### விடைத் தாள்களைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் இது பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

கல்வி, உயர்கல்வி அமைச்சு சுமார் நாற்பதாயிரம் பட்டதாரி ஆசிரியர்களைக் குறைத்து மதிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட ஆசிரியர்களின் ஐந்து சங்கங்கள் அதனைக் கண்டித்துள்ளன.

கடந்த வருடமும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இவ்வாறு கூடி எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து 1995 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டதாரிகள் சம்பளம் உட்பட பல்வேறு முரண்பாடுகளை நீக்கும் விதத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது என இலங்கைப் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் நிஸங்க பெர்னான்டோ தெரிவித்துள்ளார். (உ-10)

### சந்திரிகாவுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் மதுரைப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் படம் தீயிடப்பட்டது; ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெறுகின்றன. — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## பிதிர்க் கடன் செய்வதற்கு

# கீரிமலைக்குச் செல்லும் முயற்சி கைகூடவில்லை

ஆடி அமாவாசை தினமான இன்று, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பிரதம புண்ணிய க்ஷேத்திரமான கீரிமலைக்கு ஆயிரம்பேர் சென்று தமது பிதிர்க் கடன்களைச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி கைகூடவில்லை.

இந்துக்களின் முக்கிய பிதிர்க்கடன் நாளான ஆடி அமாவாசைத் தினத்தில் கீரிமலை சென்று சமய அனுஷ்டானம் செய்வதற்கு ஆயிரம பேரைக் கூட்டிச் செல்வதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது.

எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இப்போது எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5)

# விடுமுறை கோரிக்கை: அறிவிப்பு எதுவுமில்லை

யாழ்ப்பாணம், ஒக. 13

ஆடி அமாவாசைதினமான இன்று உள்ளூர் விடுமுறை நாளா என்பது பற்றிய அறிவித்தல் எதுவும் நேற்று மாலை வரை வெளியிடப்படவில்லை.

ஆடி அமாவாசை நாள் முந்திய வருடங்களில் உள்ளூர் விடுமுறை நாளாக்கப்பட்டு—

அதற்குப் பதிலாக இன்னொரு வார இறுதி நாள் வேலை நாளாக்கப்பட்டதை சுட்டிக்காட்டி—

இம் முறையும் அவ்வாறு செய்யுமாறு சைவ சமய அமைப்புகள் பலவும் யாழ். அரச அதிபரிடம் கேட்டிருந்தன.

இது குறித்து நேற்றுமாலை வரை யாழ். செயலகம் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. (அ-5)

# அடுத்த வருடத்திலிருந்து விடுமுறை தினம் குறைப்பு

## சிவராத்திரி தினமும் வேலைநாள்

கொழும்பு, ஒக. 13

அரசாங்க விடுமுறைகள் அடுத்த வருடத்திலிருந்து குறைக்கப்படவிருக்கின்றன.

அடுத்த வருட விடுமுறை தினங்களில் 6 தினங்களைக் குறைக்கப் போவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மகா சிவராத்திரி தினம், ஹஜ்ஜுப்பெருநாள், தேசிய வீரர்கள் தினம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த தினம் ஆகியனவும் ஜூன் 30 டிசம்பர் 31 ஆம் திகதிகளில் இருந்துவந்த விசேட வங்கி விடுமுறைகளும் அடுத்த வருடத்திலிருந்து இல்லாமற் செய்யப்படவிருக்கின்றன. (இ-3)

# ஆஸி. கிரிக்கட் கப்டன் இலங்கை வரமாட்டார்

## முதுகில் சத்திர சிகிச்சை

மெல்போன், ஒக. 13

ஆஸ்திரேலிய கிரிக்கட் கப்டன் மாக்ரெயிலர் ஸ்ரீலங்காவில் இம் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சிங்கர் கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் கலந்து கொள்ள இங்கு வரமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதுகில் ஏற்பட்ட காயத்துக்காக அடுத்த வாரம் இவருக்குச் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட விருப்பதால் ஸ்ரீலங்கா செல்லும் ஆஸ்திரேலியக் குழுவில் இவர் இடம்பெறமாட்டார் என அந்நாட்டுக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா வரும் ஆஸ்திரேலிய அணிக்குத் தற்போதைய உப கப்டன் இயன் ஹீலி தலைமை வகிப்பார்.

ஸ்ரீலங்காவில் இம் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் ஆஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே ஸ்ரீலங்கா அணிகள் மோதவுள்ளன. (இ-10)

# வன்னி மக்களுக்கு உதவ கோரிக்கை

மெல்போர்ன், ஒக. 13

வன்னிப் பகுதியில் இன்னல் படும் மக்களுக்கு மனிதாபிமான முறையில் உதவத்தமிழ் நாடு அரசு முன்வரவேண்டும்.

இப்படி ஆஸ்திரேலியாவில் இயங்கும் தமிழ் மக்கள் பேரவை தமிழக முதலமைச்சரைக் கேட்டுள்ளது

முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்தமக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையேஅந்த மகஜரில் பேரவை விளக்கியுள்ளது. (இ-3)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப் பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 13-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.